மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சிறப்பாக பணியாற்றக்கூடியவர், ஒரு கண்ணியம் மிக்க உறுப்பினர் என்ற முறையில் அவருடைய கோரிக்கையை ஏற்று, இந்தப் பேருந்து திங்கட்கிழமையிலிருந்து இயக்கப்படும் என்ற நல்ல செய்தியை மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களின் சார்பாகத் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மிக்க நன்றியை நான் மனமார, உளமார, இதயமாரத் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

(ஆ) திண்டுக்கல்—அண்ணா மாவட்டம் நிலக்கோட்டை தொகுதியில் அண்மையில் ஏற்பட்ட வெள்ளச் சேதங்கள் குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்த கவன ஈர்ப்பு திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''திண்டுக்கல்-அண்ணா மாவட்டம், நிலக்கோட்டை தொகுதியில் அண்மையில் ஏற்பட்ட வெள்ளச்சேதங்கள் குறித்த'' அவசர பொதுமுக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பொதுப்பணி துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று பேரவை முன் வைக்கப்பட்டுள்ளது.

அறிக்கை.

திண்டுக்கல்-அண்ணா மாவட்டம், நிலக்கோட்டை வட்டத்தில் சமீபத்தில் ஏற்பட்ட வெள்ளம், மழையினால் நீர்ப்பாசன பிரிவின் கீழ் 14 இடங்களில் பாதிப்பு ஏற்பட்டு, அவை செப்பனிடப்பட்டுள்ளன. இப்பணிகள் செப்பனிட தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டின் தொகை ரூ. 9,87,900 ஆகும். இப்பணிகளுக்காக ஒதுக்கப்பட்ட தொகை ரூ. 5,40,000. இவை முற்றிலும் செலவிடப்பட்டுள்ளது. மீதி தொகை, நிதி ஒதுக்கீடு செய்ததும் பட்டுவாடா செய்யப்படும்.

1993 ஏப்ரல் 1] [திரு. எஸ். கண்ணப்பன்]

<u>இப்பணிகளின் விவரம் பின்வருமாறு :</u>

	மதிப்பீடு ரூபாய்.
1. "சிலுக்குவார்பட்டி கிராமம்" பாப்பான் குளம் எல் எஸ். 420 முதல் 460 வரை உடைப்பு அடைத்தல்.	91,500
2. "சிலுக்குவார்பட்டி கிராமம்" மண்ணாவர்த்தி நீர் வரத்து கால்வாயில் உடைப்பு அடைத்தல்	80,000
3. "சிலுக்குவார்பட்டி கிராமம்" பாப்டான்குளம் எல்.எஸ். 380 முதல் 420 வரை உடைப்பு அடைத்தல்.	92,000
4. "நிலக்கோட்டை கிராமம்" கொங்கர்குளம் வாய்க்காலில் உடைப்பு அடைத்தல் ..	90,000
5. நிலக்கோட்டை கிராமம்—கொங்கர்குளம் உடரி நீர் கால்வாயில் உடைப்பு அடைத்தல். .	94,000
6. "சிலுக்குவார்பட்டி" மண்ணாவர்த்தி வாய்க்காலில் கடைப்பகுதியில் ஏற்பட்ட உடைப்பு அடைத்தல்	94,500
7. "ஆவாரம்பட்டி கிராமம்" ஆவாரம்பட்டி வாய்க்காலில் உடைப்பு அடைத்தல் ..	94,000
8. மீனாட்சிசுந்தரம் கிராமத்தில், கொங்கர் குளம் வாய்க்காலின் கலிங்கு மதகை செப்பனிடுதல்	80,000
9. ஆவாரம்பட்டி குளக்கரை எல். எஸ். 900 முதல் 975 வரை உடைப்பு அடைத்தல் ..	89,500
10. மண்ணாவர்த்தி கால்வாயில் ஏற்பட்ட உடைப்புகளை தற்காலிகமாக செப்பனிடும் பணி.	44,000
11. ஆவாரம்பட்டி குளக்கரை எல். எஸ். 1800-ல் ஏற்பட்ட உடைப்பு தற்காலிகமாக செப்பனிடும் பணி.	26,700
12. சிலுக்குவார்பட்டி கிரமத்தில் மண்ணாவர்த்தி வாய்க்காலில் ஏற்பட்ட உடைப்பை தற்காலிகமாக செப்பனிடும் பணி	[illegible]

13. சிலுக்குவார்பட்டி கிராமத்தில் பாப்பான் குளக்கரை எல். எஸ். 380 முதல் 460 வரை ஏற்பட்ட உடைப்பை தற்காலிகமாக செப்பனிடும் பணி. 53,000

14. ஆவாரம்பட்டி கால்வாய் கரை எல். எஸ். 900-ல் ஏற்பட்ட உடைப்பை தற்காலிகமாக செப்பனிடும் பணி. 35,100

மொத்தம் ரூ. .. 9,87,900

கட்டிடங்களை பொறுத்தவரை மழை வெள்ளத்தினால் ஏற்பட்ட சேதம் ரூ. 2.15 இலட்சம். இப்பணிகள் இன்னும் எடுத்துக்கொள்ளப்படவில்லை.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த விவர அறிக்கையில் பல விஷயங்கள் எடுத்துக்கொள்ளப்பட்டதற்கு நான் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதே நேரத்தில் வீடுகள் மட்டும் கிட்டத்தட்ட 2,300 வீடுகள் முழுமையாகச் சேதம் அடைந்துள்ளன. . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர்கள்— அமைச்சர் உறுப்பினருடைய கேள்விக்கு பதில் சொல்ல வேண்டும்— அவரை மறைப்பதைப் போல நிற்க வேண்டாம்.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்: அந்த வீடுகள் முழுமையாக இடிக்கப்பட்டு விட்டன. மழையின் காரணத்தால், வெள்ளத்தின் காரணத்தால் இப்படி ஏற்பட்டுள்ளது. அந்த வீடுகளை செப்பனிடுவதற்கு மத்திய அரசு, மாநில அரசு உதவியோடு இந்த நடப்பாண்டிலே பணம் ஒதுக்கப்படுமா? அதுமட்டுமல்லாமல் 100 ஆண்டுகளுக்கு முன்பு வெள்ளைக்காரன் காலத்தில் கட்டிய பேரணையில் கரையெல்லாம் உடைந்து, அதற்கு தடுப்புச் சுவர் போடுவதற்கு எஸ்டிமேட் தயார் செய்து மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு அனுப்பப்பட்டிருக்கிறது. அந்த வேலையும் இந்த ஆண்டில் எடுத்துக்கொள்ளப்படுமா? அதுமட்டுமல்லாமல் இரண்டு பக்கத்தில் இருக்கிற கரைகளுக்கு தடுப்புச்சுவர் கட்ட ஒரு கோடியே 64 இலட்சம் ரூபாயில் பி.டபிள்யூ.டி. இலாக்காவால் எஸ்டிமேட் தயார் செய்து மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. அந்த வேலையும் இந்த ஆண்டில் எடுத்துக்கொள்ளப்படுமா என்பதை

1993 ஏப்ரல் 1]

பிற்பகல் 12-15

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இடிந்த வீடுகள் சம்பந்த மாக நம்முடைய வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள்தான் அதற்கான நிதி ஒதுக்கீட்டைச் செய்யவேண்டும். இந்த கூரைகளைப் பலப்படுத்துவது, உடைந்த கரைகளை சீரமைப் பது என்பதை பொதுப்பணித்துறை ஏற்று செய்து வருகிறது. மாண்புமிகு உறுப்பினருடைய தொகுதியிலே 14 பணிகள் நடைபெற்று இருக்கின்றன. இன்னும் நடைபெற வேண்டிய பணிகள் எல்லாம் பாக்கி இருக்கின்றன. அவைகள் எல்லாம் நிதி ஆதாரம் கிடைத்தவுடன் சீரமைக்கப்படும். அந்தப் பேரணையினுடைய கரைகளை பலப்படுத்துகின்ற செயலை நம்முடைய வாட்டர் கன்சாலிடேசன் புராஜெக்ட் என்று சொல்லப்படுகின்ற உலக வங்கி திட்டத்தைச் செயல் படுத்துகின்ற நேரத்திலே நிதி அதிகம் தேவைப்படுகின்ற காரணத்தாலே அடுத்த ஆண்டு மேற்கொள்ளலாம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது வெள்ளத்தினால் ஏற்பட்ட சேதம். இப்போது சமீபத்திலே மழை பெய்த காரணத்தாலே, சேவகம்பட்டி பஞ்சாயத்து, மல்லனவெட்டி பஞ்சாயத்து ஆகிய இரண்டிலும் 325 ஏக்கரில் அறுவடைக்கு இருந்த நெல்லில் ஒரு மணி கூட இல்லாமல் அத்தனையும் முழுமையாக உதிர்ந்துவிட்டது. மண்ணோடு மண்ணாக அந்த நெல் மணிகள் எல்லாம் புதைந்துவிட்டது. தண்ணீரிலே மூழ்கிவிட்டது. ஒரு ஏக்கர் விவசாயம் செய்ய வேண்டும் என்று சொன்னால், ஒரு விவசாயிக்கு கிட்டத்தட்ட குறைந்த செலவாக 3 ஆயிரம் ரூபாய் ஆகிறது. இந்த 3 ஆயிரம் ரூபாய் மட்டுமல்லாமல்,, அந்த நெல்லை கதிர் அறுக்கும்போது, ஒரு ஏக்கருக்கு கிட்டத் தட்ட 45 மூட்டையிலிருந்து 50 மூட்டை வரைக்கும் நெல் விளைகின்றது. அதற்குச் செலவு செய்வது 2 ஆயிரம் ரூபாய்க்கும் மேலே. அந்த விவசாயிகள் மிகவும் பாதிக்கப்பட்டு இருக் கிறார்கள். ஆகையினால், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு—அந்த 325 ஏக்கருக்கும் —குறைந்தது அவர்களுக்கு நஷ்ட ஈடாக ஒரு ஏக்கருக்கு அவர்கள் செலவு செய்த பணத்தை மட்டுமாகிலும், 3 ஆயிரம் ரூபாயாகிலும் கொடுப்பதற்கான நடவடிக்கை எடுப் பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது வேளாண்மைத் துறை அமைச்சரிடம் வைக்க வேண்டிய கோரிக்கை. வெள்ளத் தினாலே, வேளாண்மை பாதிக்கப்படுகிறபோது, வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்தான் அதற்கான நடவடிக்கையை

எடுத்து வருகிறார்கள். வெள்ளத்தினாலே வீடுகள் பாதிக்கப்படுகின்றபோது, அதை நம்முடைய வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள் தான் பார்த்துக் கொண்டு வருகிறார்கள். அதற்கான நடவடிக்கையை எடுக்கிறார்கள். பொதுப்பணித்துறை, கரைகளை சீரமைப்பது, கால்வாய்களை சீரமைப்பது, உடைந்த கரைகளை அடைப்பது, அணைக்கட்டுகளுக்கு சேதம் ஏற்பட்டால், பழுதுபார்ப்பது போன்ற பிரச்சினைகளை எல்லாம் செய்து வருகிறது. ஆகவே, பொதுப்பணித்துறை சம்பந்தப்பட்ட எல்லா வேலைகளும்—மாண்புமிகு உறுப்பினருடைய தொகுதியிலே ஏற்பட்ட வெள்ள நிவாரணப் பணிகள் போன ஆண்டு நிதி இல்லாவிட்டாலும் கூட, இந்த ஏப்ரல் மாதத்திலே நிதி ஒதுக்கியவுடனே மீதம் உள்ள வேலைகள் முடிக்கப்படும்.

5. மானியக் கோரிக்கைகள், 1993—94—விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

(அ) கோரிக்கை எண் 17—கல்வி.

(ஆ) கோரிக்கை எண் 51—தமிழ் வளர்ச்சி—பண்பாடு —தொடர்ச்சி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 1993—94 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகள் மீது விவாதமும் வாக்கெடுப்பும், 31-3-1993 அன்று மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களால் முன்மொழியப்பட்ட மானியக் கோரிக்கைகள் மீது விவாதம். திரு. குமரி அனந்தன். நிறைய உறுப்பினர்கள் பேசுகிறார்கள். மாலையிலே அவை நடக்க இருக்கிறது. ஆகவே 15 நிமிடத்திலே முடித்துக் கொள்ளுங்கள்.

திரு. குமரி அனந்தன்: மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, 1956 ஆம் ஆண்டு தமிழ் ஆட்சி மொழிச் சட்டம் பெருந்தலைவர் காமராஜ் அவர்கள் தமிழகத்தினுடைய முதல்வராக, காங்கிரஸ் ஆட்சி நடைபெற்றுக் கொண்டிருந்த நேரத்திலே கொண்டுவரப்பட்டு நிறைவேற்றப்பட்டது. தமிழ்த் தட்டச்சிலேயிருந்து, எத்தனையோ கருவிகள் கொடுக்கப்பட்டது மட்டுமல்ல, நூல்களும் தயாரிக்கப்பட்டன. ஆனால், இன்னும் நாம் முழுமையாக தமிழை ஆட்சி மொழியாகக் கொண்டு வரவில்லை என்பதனை நமது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொடுத்திருக்கின்ற இந்தக் கொள்கைக் குறிப்பிலே நாம் பார்க்கிறோம். இத்தனை ஆண்டுகள் காலதாமதம் ஆனதற்கு என்ன காரணம் என்று ஆராய்ந்து விரைவிலே, பெருந்தலைவர் காமராஜ் அவர்கள் எண்ணிய எண்ணத்தை நிறைவேற்ற வேண்டும் என்று நமது அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.